**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.3535/ஆ5/2024, நாள். 29.08.2024**

•••••

பொருள் பள்ளிக் கல்வி – 2021–2022ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு – நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களின் பிறந்த நாளன்று ஆண்டுதோறும் மாவட்ட அளவில் பள்ளி மாணாக்கர்களுக்கான பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்குதல் – பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட அளவில் (03/09/2024 மற்றும் 04/09/2024) பேச்சுப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்குதல் – பள்ளிகளில் 6 முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களை போட்டியில் பங்கேற்க செய்தல் – தொடர்பாக

பார்வை

1. தமிழ் வளர்ச்சி துறை 2021–2022ஆம் அண்டிற்கான மானியக் கோரிக்கை எண். 46, அறிவிப்பு எண். 17, நாள். 31.08.2021
2. வேலூர் மாவட்டம், தமிழ் வளர்ச்சி துணை இயக்குநரின் கடிதம் ந.க.எண்.275/2024, நாள். 23.08.2024 (இவ்வலுவலகம் பெறப்பட்ட நாள். 27.08.2024)

•••••

பார்வையில் காணும் கடிதத்திற்கிணங்க 2021–2022ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், நாட்டிற்காக பாடுபட்ட தலைவர்களான மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு, அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் பிறந்த நாளன்று மாவட்ட அளவில் பள்ளி மாணாக்கர்களுக்கு பேச்சுப் போட்டிகள் நடத்தி பரிசு தொகையும், பாராட்டு சான்றிதழும் வழங்கப்படும் என்ற அரசின் அறிவிப்பினை செயற்படுத்தும் முகமாக வேலூர் மாவட்டத்தில் 2024–2025ம் நிதியாண்டில் பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் ஆகியோரின் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட அளவில் அரசு / தனியார் / நிதியுதவி பள்ளிகளில் 6 முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு தனித்தனியே பேச்சுப் போட்டிகள் கீழ்காணும் படி நடைபெறவுள்ளது. <u>இப்போட்டிக்கு பள்ளிக்கு ஒருவர் வீதம் மட்டுமே பங்கேற்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.</u>

| |
|---|
| பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் பேச்சுப் போட்டி<br>நடைபெறும் இடம் – அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, காட்பாடி<br>நாள். 03.09.2024 (செவ்வாய்க்கிழமை) நேரம் – காலை 9.00 மணி |

| |
|---|
| தந்தை பெரியார் பிறந்த நாள் பேச்சுப் போட்டி<br>நடைபெறும் இடம் – அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, காட்பாடி.<br>நாள். 04.09.2024 (புதன்கிழமை) நேரம் – காலை 9.00 மணி |

இப்பேச்சு போட்டிகளில் (பேறிஞர் அண்ணா, தந்தை பெரியார்) பங்குபெறும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியே முதல் பரிசாக ரூ.5,000/- இரண்டாம் பரிசாக ரூ.3,000/- மூன்றாம் பரிசாக ரூ.2,000/- மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களும் வழங்கப்பெறும். அத்துடன் பங்கேற்கும் மாணவர்களுள் அரசுப் பள்ளி மாணவர்கள் இருவரை மட்டும் ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியே தெரிவு செய்து சிறப்புப் பரிசாக தலா ரூ.2,000/- மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கப்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே அரசு / தனியார் / நிதியுதவி பள்ளிகளில் 6 முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களில் பள்ளிக்கு ஒருவர் வீதம் மட்டுமே பங்கேற்க வேண்டும். பேச்சுப் போட்டியில் பங்கேற்கும் மாணவ மாணவியர் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தை நிறைவு செய்து தலைமையாசிரியர் பரிந்துரையுடன் போட்டி நடைபெறும் அன்று ஒப்படைக்கவேண்டும். மாணாக்கர்களுக்கு தெரிவிக்கும் வகையில் போட்டிகளுக்குரிய தலைப்புகள் மற்றும் போட்டிகளுக்கான விதிமுறைகளும் பங்கேற்பு படிவமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

எனவே, <u>அனைத்து அரசு / தனியார் / நிதியுதவி பள்ளிகளில் 6 முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களில் பள்ளிக்கு ஒருவர் வீதம்</u> இப்பேச்சு போட்டியில் பங்கேற்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி தாளாளர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு –

1. போட்டியின் விதிமுறைகள்
2. படிவம்
3. தலைப்புகள்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்கள் / தாளாளர்கள்,
அனைத்து அரசு / நிதியுதவி பெறும் நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள்
மற்றும் மெட்ரிக் பள்ளிகள்
வேலூர் மாவட்டம்.

நகல்–

1. மாவட்ட தமிழ் வளர்ச்சி துணை இயக்குநர்,
   தமிழ் வளர்ச்சி துறை, மாவட்ட ஆட்சியர் வளாகம்,
   வேலூர் மாவட்டம்.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
   (இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி)
   (இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி) பள்ளிகளுக்கு தகவல் தெரிவிக்கும் பொருட்டு அனுப்பப்படுகிறது. )
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)